# **PRESS NOTE**

The Vigilance and Anti-Corruption registered a case against A-1 Thiru.S.Sathiyanarayanan, formerly Assistant (Cashier) worked at Institute of Mental Health, Kilpauk, Chennai – 10 and his sons A-2 Tr.Raman and A-3 Tr.Lakshmanan. During his tenure as cashier at the Institute of Mental Health, A-1 Thiru.S.Sathiyanarayanan accumulated wealth which is disproportionate to his know sources of income in his name and also in the name his sons A-2 Tr.Raman and A-3 Tr.Lakshmanan for a period 9 years. He accumulated wealth to tune of 241.30% which was disproportionate to his known sources of income.

The above said case was under trial at the Special Court, Chennai. On 30.09.2022 the Special Court, Chennai delivered the judgment and A-1 was convicted for the offences u/s.13(2) r/w 13(1)(e) of PC Act, 1988 and is sentenced to undergo Rigorous Imprisonment for a period of Three years and shall pay a fine of Rs.5,000/- and in default to undergo simple imprisonment for 3 months. A-3 was convicted for the offences u/s. Sec 109 I.P.C. r/w u/s. 13(2) r/w 13(1)(e) of Prevention of Corruption Act, 1988 and is sentenced to undergo Rigorous imprisonment for a period of one year and shall pay a fine of Rs.5,000/- and in default to undergo simple imprisonment for 3 months.

# <u>பத்திரிகை செய்தி</u>

## <u>வருமானத்திற்கு அதிகமான சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற மனநல காப்பகத்தின் முன்னாள் உதவி காசாளர் மற்றும் அவரது மகன்</u>

குற்றவாளி திரு.S.சத்தியநாராயணன் என்பவர் சென்னை-10, கீழ்ப்பாக்கத்தில் உள்ள மனநல காப்பகத்தில் உதவியாளராக அரசாங்க பணியில் சேர்ந்தார். அவர் கடந்த 1997 முதல் 2006 வரை காப்பகத்தின் உதவி காசாளராக பணிபுரிந்த சமயத்தில், தனது மற்றும் தனது மகன்கள் திரு.ராமன், மற்றும் திரு.லட்சுமணன் ஆகியோர் பெயர்களில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கி உள்ளதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு இரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில், அடிப்படை விசாரணை மேற்கொள்ளப்பட்டு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அதிகாரி அவர்களால் சொத்து குவிப்பு வழக்கு 2007-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கினை புலன் விசாரணை மேற்கொண்டதில், குற்றவாளி திரு.S.சத்தியநாரயணன் பணியில் சேரும் போது, அவர் பெயரிலே, அவரின் மகன்களின் பெயரிலே எவ்வித அசையும் மற்றும் அசையா சொத்துகள் இல்லை. பின்னர் 1997 முதல் 2006 வரை மனநலகாப்பகத்தின் காசாளராக பணிபுரிந்த குறுகிய காலத்தில், சுமார் ரூபாய் 20,07,609/- அளவிற்கு வருமானத்திற்கு அதிகமான சொத்துகளை அவர் மற்றும் அவருடைய மகன்கள் பெயரில்

அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வாங்கி குவித்துள்ளார் என்பது 32 சாட்சிகள் மற்றும் 29 ஆவணங்கள் அடிப்படையில் நிரூபனமானது. எனவே, கடந்த 2009-ம் ஆண்டு மேற்படி மூவரின் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்றப்பத்திரிக்கையை சென்னை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

இந்த வழக்கின் மீது, சென்னன ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில், மேற்படி குற்றவாளி திரு.S.சத்தியநாராயணன் மற்றும் அவரது மகன் திரு.லட்சுமணன் ஆகியோர்கள் மீது குற்றம் உறுதி செய்யப்பட்டு இன்று 30.09.2022 வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் குற்றம் சாட்டப்பட்ட திரு.S.சத்தியநாராயணன், உதவி காசாளருக்கு சட்டப்பிரிவு 13(2) r/w 13(1)(e) of PC Act, 1988 கீழ் 3 ஆண்டுகள் சிறைதண்டனையும், ரூபாய் ஐந்தாயிரம் அபராதமும், அவரது மகன் திரு.லட்சுமணன் அவருக்கு சட்டப்பிரிவு 109 I.P.C. r/w u/s. 13(2) r/w 13(1)(e) of Prevention of Corruption Act, 1988 கீழ் ஒரு ஆண்டு சிறை தண்டனையும், ரூபாய் ஐந்தாயிரம் அபராதமும் தண்டனை அளித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.